**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# நாகூமின் புத்தகம்

**பெயரின் பொருளடக்கம்** : இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் ஆசிரியர் நாகூம். அவரது பெயரின் பொருள் "ஆறுதல்" அல்லது "தேறுதல்" மற்றும் நெகேமியாவின் சுருக்கப்பெயர் என்றும் கூறலாம் (ஆறுதலின் தேவன்). எல்கோசான் என்னும் நகரத்திலிருந்து வந்தவர்.( நாகூம் 1:1 )

**எழுதிய வருடம்** : நாகூமின் புஸ்தகம் 633 - 612 கி.மு. வில் எழுதியிருக்க வாய்ப்பு இருக்கிறது.

நாகூம் தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்ட இரண்டு சம்பவங்கள் இந்த நாட்களை உறுதிப்படுத்த நமக்கு உதவுகிறது.

1. எகிப்திலுள்ள தீப்ஸ் *Thebes* (நோ-அம்மோன் *No Amon*) அசீரியரின் (663 கி.மு.) கைகளில் விழுந்தது என்று இறந்தகால வடிவத்தில் நாகூம் குறிபிட்டுள்ளார். அப்படியென்றால், அது ஏற்கனவே நடந்தாயிற்று.
2. மீதியான நாகூமின் தீர்க்கதரிசனம் 612 கி.மு. வில் நடந்தேரியது.

தீப்ஸ் என்னும் நோ-அம்மோன் (3:8–10), 663 கி.மு. களில் ஆஷுர்பனிபாலின் (*Ashurbanipal*) கைகளில் வீழ்ந்ததை நாகூம் குறிப்பிட்டிருக்கிறார். இது அவரது நினைவில்

*புதிதாக பதிந்துபோல் தோன்றுகிறது. அதோடு, இந்த காரியம் நடந்து பத்து வருடங்களுக்கு பிறகு தூண்டிவிடப்பட்டதை பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. ஆகவே இந்த நூல் கி.மு. பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் மனாசேயின் ஆட்சி காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று பரிந்துரை செய்யப்படுகிறது. (695–642 கி.மு.; 2 இராஜாக்கள் 21:1–18).*


*பொல்லாத யூதாவின் இராஜாக்களில் ஒருவனாகிய மனாசேயின் ஆட்சி காலத்தில் நாகூம் போதித்து கொண்டிருந்தார். மனாசேயின் அனுபவத்திலிருந்தே அவனுக்கு தான் எப்பிடி ஒரு நல்ல அரசனாக இருக்கவேண்டும் பாடம் புகட்ட வேண்டியிருந்தது. யூதா வரலாற்றிலே மிகுந்த இருள் சூழ்ந்த காலத்தில் நாகூம் பிரசங்கித்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் தேசம் முழுவதும் பலவிதமான விக்கிரக வழிபாட்டினால் நிறைந்திருந்தது, மட்டுமல்லாமல் தேசம் முழுவதுமாக தேவனுக்கு விரோதமாய் திரும்பிற்று.*

***வரலாற்று பின்னணி** :*

*மிக பெரிய நகரமான நினிவேவிற்கு போதிக்கும்படியாக கர்த்தர் யோனாவை அனுப்பினார். அங்கிருந்த ஜனங்கள் தங்கள் விக்கிரகத்தினின்றும், வன்முறையினின்றும், அகந்தையினின்றும் (இறுமாப்பு) மனந்திரும்பினார்கள்.*

*அந்த நாட்களில் அசீரியா உலகத்திலே மிகுந்த வலிமை வாய்ந்ததாகவும் இருந்தது. மற்றும் தங்களுடைய எல்லையை எகிப்து வரைக்கும் விரிவுப்படுத்தினார்கள். இதினிமித்தம் பக்கத்து தேசங்களான பாலஸ்தீனும் சிரியாவும் மிகவும் வலிமையை இழந்தது.*

*கி.மு. 670 களில், எசரத்தோன் (Esarhaddon) வெற்றி கொண்ட ஜனங்களை சமாரியாவிலும் கலிலேயாவிலும் சமீபத்திலே இடமாற்றினான்.*



*இந்த தருணத்தில், தேவன் நினிவேயை வீழ்த்தி பாபிலோன் ராஜாவான நபோபோலாசார் (Nabopolassar) மற்றும் அவனது குமாரனாகிய நேபுகாத்நேச்சாரின் (Nebuchadnezzar) வலிமையை ஓங்கச் செய்தார் (612 கி,மு.). அசீரியா கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்து ஒன்றும் இல்லாமல் கர்த்தர் உரைத்தபடியே நடந்தது.*

*நாகூம் பற்றி புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், நாகூம் பற்றிய ஒரு சந்தேக குறிப்பு ரோமர் 10:15 மற்றும் (cf. ஏசாயா. 52:7)ல் இருக்கலாம்.*

**நோக்கம்** :

*யூதா ஜனங்களுக்கு நாகூம், ஆண்டவருடைய நீதி எப்பொழுதும் சரியாகவும் என்றைக்கும் நடந்தே தீரும் என்று ஞாபகப்படுத்தினார். அவர் தம் ஜனங்களுக்கு பாராட்டுகிற இரக்கமும் நன்மையான ஆசீர்வாதங்களும் இறுதியில் அவருடைய உன்னதமான நீதியால் வரும் நியாயத்தீர்ப்பு அதை ஒருபோதும் தடை செய்யாது.*

*சுமார் 150 வருடங்களுக்கு முன்பு ஆண்டவர் யோனாவை நினிவேக்கு அனுப்பினார். ஆனால் இப்பொழுது ஆண்டவர் நாகூமைக் கொண்டு அவர்களுடைய நடத்தையினால் வரும் நியாயத்தீர்ப்பின் விளைவுகளை குறித்து பேசினார்.*


*ஆண்டவர் வாக்களித்த நியாயத்தீர்ப்பிலிருந்து மீண்ட நினிவேயை குறித்து யோனா உரையாற்றுகிறார். நாகூம், ஆண்டவருடைய நியாத்தீர்ப்பு எப்படி இருக்கும் என்பது குறித்து விவரிக்கிறார்.*

*நினிவே ஜனங்கள் தங்களுடைய நகரம் பாதிப்படையாதவாறு தங்கள் நகரத்தின் மதில்களை 100 அடி உயரத்திற்கும் மற்றும் 60 அடி ஆழமும் 150 அடி அகலமும் கொண்ட பள்ளத்தினால் செறிவூட்டியிருந்ததைக் குறித்து பெருமை பாராட்டிக்கொண்டிருந்தர்கள்.*



## The City of Nineveh

Nineveh, which was situated at the confluence of the Tigris and Khoser rivers (modern-day Mosul, Iraq), was first settled in the seventh millennium B.C. According to the Bible, Nimrod was the founder of the city (Gen. 10:11). Major excavations took place under the direction of Henry Layard from 1845 to 1854. The diagram pictures the results of those excavations, especially as they reflect the period of the Assyrian Empire (1420–609 B.C.). Around 1000 B.C. there occurred a great revival of Assyrian power, and Nineveh became a royal city. It was a thriving city during the first half of the first millennium, and contained such luxuries as public squares, parks, botanical gardens, and even a zoo. One of the great archaeological finds of the period is the library of King Ashurbanipal (669–627 B.C.; called Osnappar in Ezra 4:10). The size of the city was approximately 1,850 acres. The book of Jonah reflects the flourishing nature of Nineveh at this time (3:1–5). Nineveh eventually fell to the Medes and Babylonians in 612 B.C. The invading armies dammed the rivers that supplied water to the city, causing a flood that broke through one of the perimeter walls, giving the foreign armies access to the city.



*சர்வ வல்லமையுள்ள தேவன் (1:2–5) தம்முடைய நியமங்களை (1:8,14; 3:5–7) மீறினவர்கள் மீது பழிகளை சுமத்துவார் என்கிற உண்மையை நாகூம் ஸ்திரப்படுத்தினார். அதே கர்த்தர், தம் ஜனத்தை நியாயந்தீர்க்கிறார்; அந்த நியாயத்தீர்ப்பினால் அவர்களை துன்மார்க்கத்திலிருந்து மீட்டு, தம்மில் விசுவாசமுள்ளவர்கமேல் தம்முடைய அன்பின் இரக்கத்தை பொழிகிறார். (1:7,12,13,15; 2:2).*

*கொடூரர்களான அசீரியர்களுக்கு பயந்துபோயிருந்த யூதாவிலுள்ள ஜனங்கள் எல்லோருக்கும் இந்த தீர்க்கதரிசனம் ஒரு ஆறுதலை தந்தது. நினிவே "பெரும் வெள்ளத்தினால்" விழும் என்று நாகூம் சொன்னார்(1:8). அதேபோல் தீக்ரிஸ் நதி (Tigris River) அந்த நகரத்தின் மதில்களை தகர்த்து பாபிலோனியர்களை நுழையவிட்டது. அதோடுகூட அந்த நகரம் மறைந்துபோகும் என்றும் நாகூம் தீர்க்கதரிசனமாக உரைத்தார். அதேபோல், அன்றிலிருந்து கி.பி 1842 வரை அந்த நகரம் கண்டுபிடிக்கப்படவில்லை.*

*யோனா தன்னுடைய பிரசங்கத்தில் ஜனங்களுக்கு ஒரு எச்சரிப்பை தெளிவாக உச்சரித்து கொடுத்திருந்தார். நாகூமை தொடர்ந்து அந்த நகரத்தின் அழிவை செப்பனியாவும் தீர்க்கதரிசனமாக உரைத்தார் (செப்பனியா 2:4-15). குறிப்பிட்டபடியே அந்த நகரத்தை குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின.*

***புத்தகத்தின் சுருக்கம்:***

## ***நினிவேயின் அழிவைப் பற்றிய அறிவிப்பு Destruction of Nineveh Declared (1:2–15)***

- *ஆண்டவருடைய வல்லமை விளக்கப்பட்டுள்ளது. God's Power Illustrated (1:2–8)*
- *ஆண்டவருடைய ஆக்கினைத்தீர்ப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. God's Punishment Stated (1:9–15)*

## ***நினிவேயின் அழிவைப் பற்றிய விரிவாக்கம்***

## ***Destruction of Nineveh Detailed (2:1–13)***

- *நகரம் தாக்கப்பட்டது The City is Assaulted (2:1–10)*
- *நகரம் மதிப்பிழந்தது The City is Discredited (2:11–13)*

## ***நினிவேயின் அழிவு அவசியமானதே!***

## ***Destruction of Nineveh Demanded (3:1–19)***

- *முதலாம் தாக்குதல் The First Charge (3:1–3)*
- *இரண்டாம் தாக்குதல் The Second Charge (3:4–7)*
- *மூன்றாம் தாக்குதல் The Third Charge (3:8–19)*

## ***நாகூமின் தீர்க்கதரிசனம் :***

- *நினிவே மக்கள் தங்களுடைய கடைசி நேரங்களில் மதுபானத்தினால் வெறிகொண்டிருப்பார்கள் - நாகூம் 1:10*

- *நினிவே மக்கள் நிர்மூலம் ஆவார்கள் - நாகூம் 1:14*
- *நினிவே மக்கள் அக்கினியினால் அழிந்து போவார்கள் - நாகூம் 3:15*
- *இராணுவ அதிகாரிகளால் கைவிடப்படுவார்கள் - நாகூம் 3:17*
- *நினிவே நிரந்தரமாக அழிக்கப்படும் - நாகூம் 3:19*

*நினிவேயை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த யோனா மற்றும் நாகூம் - ஒப்பீடு*
***Comparison of Jonah and Nahum who prophesied to Nineveh***

| **யோனா** | **நாகூம்** |
|---|---|
| தேவனுடைய இரக்கம் | தேவனுடைய நீதி |
| *~800 கி.பி.* | *~650கி.பி.* |
| தீர்க்கதரிசியை வலியுறுத்துகிறது | தீர்க்கதரிசனத்தை வலியுறுத்துகிறது |
| கீழ்படியாத தீர்க்கதரிசி | கீழ்படிதலுள்ள தீர்க்கதரிசி |
| கீழ்படிதலுள்ள தேசம் | கீழ்படியாத தேசம் |
| ஜலத்தினின்று விடுதலை | ஜலத்தினால் அழிவு |
| நினிவேயின் மனந்திரும்புதல் | நினிவேயின் எதிர்ப்பு / கிளர்ச்சி |

***நாகூம்*** *3:17,* ***கர்த்தர்*** *நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.*

*முடிவுரை:*

*நாகூம் 1:15 ல் குறிப்பிட்டுள்ள அதே வசனத்தை பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் 10:15 ஆம் வசனத்தில் மேசியாவைக் குறித்தும் அவருடைய ஊழியத்தை குறித்தும் மற்றும் அவர் சமயத்தில் கிறிஸ்துவுக்குள் இருந்த அப்போஸ்தலர்களை குறித்தும் குறிப்பிட்டுள்ளார். எந்த சுவிசேஷ ஊழியராயிருந்தாலும் "சமாதானத்தைக் குறித்த சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும்" என்பது அவர்களுடைய முக்கிய வேலையாயிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதோடு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தேவன் பாவிகளோடு சமாதானம் மேற்கொண்டார். மேலும், "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை" அவருடைய ஜனங்களுக்கு தந்திருக்கிறார். (பிலிப்பியர் 4:7).*

*சுவிசேஷகருடைய ஊழியம் இப்படியாய் காரியங்களை கொண்டு வர வேண்டும்,*

- *சந்தோஷமான நற்செய்திகளை கொடுத்தல்*
- *சமரசம்*
- *நீதி*
- *மன்னிப்பு*
- *ஜீவன் மற்றும்*
- *சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவினால் கிடைத்த நித்தியமான இரட்சிப்பு.*

*அப்படிப்பட்ட சுவிசேஷத்தை பிரசங்கிப்பதும் அப்படிப்பட்ட நற்செய்திகளை கொண்டு வருவது அவர்களுடைய பாதங்களை அழகுபடுத்தும். இங்கு எதை*

*உருவகப்படுத்துகிறது என்றால் யார் ஒருவர் ஆர்வமுடன் ஓடி சந்தோஷமாய் ஆண்டவருடைய வார்த்தைகளை பிரசித்தப்படுதுகிறார்கள் என்பதே.*




***இன்றைய பயன்பாடு** :*

1. *கர்த்தர் பொருமையுள்ளவர், கோபிப்பதற்கு தாமதிக்கிறார். அவர் ஒவ்வொரு தேசமும் தம்மை தேவன் என்று அறிக்கையிடுவதற்கு காலம் தருகிறார். ஆனால் அவர் தம்மை பரியாசம்பண்ணவொட்டார் (He is not mocked).*

   *ஒவ்வொரு தேசமும் தம்மைவிட்டு திரும்பும்போதும் தமது நியாயதீர்ப்பினால் அவர்களை சந்திக்கிறார். நமது பிரித்தானிய ஐக்கிய ராஜ்ஜியங்கள் (United Kingdom) உட்பட பல தேசங்களின் நிலையை பார்ப்போமானால், அவை*

நமது வேதத்தின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டவை. ஆனால் கடந்த 50 ஆண்டுகளில் அந்த நிலை மாறி, வேதத்திற்கு புறம்பான திசையில் சென்றுகொண்டிருக்கிறோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் வேதத்தின் கோட்பாடுகளுக்கும் அதின் சத்தியங்களுக்கும் ஆதரவாக நிற்பது நமது கடமையாகும். ஏனெனில், சத்தியம் மாத்திரமே நமது தேசத்தின் ஒரே நம்பிக்கை.

*As Christians, it is our duty to stand up for biblical principles and scriptural truth, for Truth is our country's only hope.*

2. நமது இதயத்திலும் நம்மை சுற்றியும் இருக்கும் இருளில் நாம் அமிழ்ந்து போகும் அளவிற்கு சென்ற அனுபவம் நமக்கு கண்டிப்பாக இருக்கும். நாகூம் அப்படிப்பட்ட ஒரு இருள் சூழ்ந்த காலகட்டத்தில் வாழ்த்தார். கர்த்தருக்கென்று உண்மையாய் இருப்பவர்கள், இன்னும் எத்தனை காலம் சமூகத்தின் பழக்கவழக்கங்களையும் ஆவிக்குரிய பழக்கவழக்கங்களையும் சகித்துக்கொண்டு வாழ வேண்டும் என்று தங்களுக்குள் எண்ணி திகைத்த காலம் அது.

   *No doubt we all have felt overwhelmed by the darkness both within ourselves and in our world. Nahum lived in a dark time, a time in which the faithful few must have wondered how long they would have to resist cultural and spiritual compromise.*

3. தேவன் யோனாவைக்கொண்டு நினிவே பட்டணத்திற்கு தீர்க்கதரிசனமாக மனம் திரும்ப வேண்டும் என்று வேண்டினார்.மக்கள் அதற்கு கீழ்படிந்து மனந்திரும்பினார்கள். ஆனால் அவர்களுடைய மனந்திரும்புதல் நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஒரு 100 வருடத்தில் மீண்டும் அவர்கள் தங்குளுடைய பழைய நிலைக்கு திரும்பினார்கள் காரணம் அவர்களுடைய செல்வசெழிப்பே! நீங்கள் எப்பிடி? நீங்கள் தொடர்ந்து மனந்திரும்பிக் கொண்டிருக்கிண்டீர்களா?